55

# ஆண்டாள் பிரியதர்ஷனியின் சுயம்பேசும் கிளியில் பெண்

**கு.ஜெயலட்சுமி**

**ஏபிசி மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி.**

**ஆய்வுச்சுருக்கம்**

சமூக பொருளாதார அறிவியல் வளர்ச்சிக்கு ஏற்றாற்போல மக்களின் வாழ்க்கை முறையில் மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன. இரண்டாயிரம் ஆண்டுகால தமிழக வரலாற்றில் ஆண்களின் மேலாதிக்கம் தொடர்ந்து நிலைபெற்று இருந்ததை அறிய முடிகிறது. கல்வி, சமத்துவ உரிமை, பேச்சுரிமை இவற்றின் தொடர்பாக பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் ஏற்பட்ட தாக்கம் பின் இந்தியாவிலும் எதிரொலித்தது.; “மங்கையராகப் பிறப்பதற்கே – நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா”என்று கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை கூறுகிறார். அத்தகைய பெருமையினையுடைய மகளிர் சிலகாலம் சீரோடும் சிறப்போடும் வாழ்ந்தனர். ஆனால் பின் மாதரை இழிவுபடுத்தும் நிலை ஏற்பட்டது. இதன் விளைவாக சமூக வளர்ச்சியில் ஆண்கள் மட்டுமே பங்கேற்பதும் ஆண்களின் தேவையை பெண்கள் கவனித்துக் கொள்வதும் நடைமுறையாகியது. ஆண் - பெண் சமம் என்று கூறினாலும் அது இன்றளவும் வாய்மொழி அளவிலேயே உள்ளது. அவ்வகையில் குடும்ப வாழ்விலும் வெளிஉலகிலும் மனஉளைச்சலுக்கும் உடல் உளைச்சலுக்கும் ஆளாகும் பெண்மையை சுயம் பேசும் கிளி மிகவும் தெளி;வாகவும் ஆழமாகவும் வெளிப்படுத்துகிறது. எல்லாவிதமான தடைகளையும் மீறி பெண்கள் சுதந்திரம் பெறவேண்டும் என விரும்புவதாக உள்ளது. பெண் பணத்திற்கும் பொருளுக்கும் அடிமையாவதைவிட பாசத்திற்கே அடிமையாகலாம் என பாசத்திற்கு முக்கியத்துவம் தந்து அதன்மூலம் குடும்ப உறவுகளைப் பேணும் நிலை பற்றியும் கூறுகிறது. ஆண்களாலும் சமுதாயத்தாலும் அடிமைப்படுத்தப்பட்டாலும் தன் மனஉணர்வுகள் வெளிப்படாவண்ணம் அமுக்கப்பட்டாலும் தன் விடுதலையைத் தானே முயன்று பெறுவதும் தன் சுயத்தைத் தானே நிறுவுவதும் பெண்மைக்குச் சாத்தியமே என்று நிறுவுகிறது சுயம் பேசும் கிளி.

முன்னுரை

சமூகத்தைச் சீரமைக்கும் மனப்பான்மையில் எழுதுவது ஒரு எழுத்தாளனின் கடமை. மக்களிடம் எந்தவொரு கருத்தையும் கொண்டு சேர்ப்பதற்கு கவிதை ஒரு சிறந்த கருவியாக உள்ளது. சங்க காலம் முதல் இன்றைய புதுக்கவிதைக் காலம் வரை காலத்திற்குக் காலம் மாறுதல் அடைந்த சமூகத்தின் நிலையே கவிதைகளின் பாடுபொருளாக அமைந்திருக்கின்றன. அவ்வகையில் ஆண்டாள் பிரியதர்ஷனி எழுதிய சுயம் பேசும் கிளி என்னும் கவிதைத் தொகுப்பு முன்னிறுத்தும் பெண்களின் நிலையை வெளிக்கொணர்வதே இவ்வாய்வின் நோக்கம் ஆகும்.

**பெண்ணியம் பற்றிய சிந்தனைகள்**

பெண்ணியம் என்பது பெண்கள் அடிமைப்படுத்தப்படுவதை எடுத்துக்காட்டி அதிலிருந்து பெண்ணினத்தை மீட்டெடுப்பது ஆகும். பெண்ணியம் பெண்களின் உரிமைகளைப் பற்றி பேசி பெண் தன் வாழ்வில் முன்னேறுவதற்கான வழிமுறைகளைக் கூறுவது ஆகும். பெண்கள் தம் வாழ்வினில் எவ்விதமான அடக்குமுறைகளின்றி சுதந்திரமாக வாழ வழி செய்வதே பெண்ணியத்தின் நோக்கம் ஆகும். பெண்ணியம் ஆங்கிலத்தில் ‘குநஅiniளைஅ’என்றும் இலத்தீனில் ‘குநஅ்யெ’என்றும் அழைக்கப்படுகிறது. குநஅ்யெ

என்பதற்கு 'பெண்களின் குணாதிசயங்களைக் கொண்டுள்ள' என்பது பொருள். பெண் தன்னை ஆணுக்கு நிகரானவள் என்று ஏற்றுக் கொள்ளச் செய்வதே பெண்ணியம் என்னும் நோக்கில் ஜெயின்இ
"பெண்கள் ஒருவரோடு ஒருவர் இணைந்து ஓர் ஆற்றலை உருவாக்கி பெண்மை அதன் தன்மையில்ஆண்களொடு மாறுபட்டிறுப்பினும் அது ஆண்மைக்கு நிகரானது என ஏற்றுக் கொள்ள வைப்பது ஆகும்." என்று குழுவாக இணைந்து பெண்கள் செயல்படும் அமைப்பே பெண்ணியம் என்கிறார் என்று சு.முத்துச்சிதம்பரம் தனது பெண்ணியம் தோற்றமும் வளர்ச்சியும் நூலில் (ப.11)கூறுகிறார்.

புட்சர் கருத்து

ஆண் பெண் பாகுபாட்டினைக் கூறி அதன் மூலம் பெண்கள் அடையக்கூடிய இன்னல்களை எதிர்த்துப் போராடுவதேபெண்ணியம் என்ற நோக்கில் புட்சர். "பெண்ணியம் என்பது பெண்கள் பாலின பாகுபாட்டால் அனுபவிக்கும் தனிப்பட் பொருளாதார துன்பங்களை எதிர்த்து மேற்கொள்ளும் இயக்கமே"
என்று மொழிவதாக சு.முத்துச்சிதம்பரம் தனது பெண்ணியம் தோற்றமும் வளர்ச்சியும் நூலில் (ப.11)கூறுகிறார். மேலும் பெண்கள் எந்த அளவிற்குத் தாழ்ந்த நிலையினில் இழிவுபடுத்தப்படுகிறார்கள் என்று ஆராய்ந்து அதனை மாற்ற முயல்வதே பெண்ணியம் என்ற நோக்கில் பெண்களின் தாழ்நிலையை ஆராய்ந்து அதை மாற்ற மேற்கொள்ளப்படும் வழிமுறைகளே பெண்ணியம் என்றும் புட்சர் கூறுகிறார்.

**ஆண்டாள் பிரியதர்ஷனியின் கருத்து நிலை**

பெண் எழுத்து உணர்ச்சியை வெளிப்படுத்தித் தன்னை எழுதுவதன் மூலம் சமூகத்தை அறிந்து கொள்ளச் செய்வது என்பதனை ஆண்டாள் பிரியதர்ஷனிஇ
"பெண் எழுத்து உணர்ச்சிக் களஞ்சியம்இ உணர்வுக்கடல் தன்னையே எழுதி தன் உயர்வைக் கீழிறக்கும் சமூகத்தின் முகத்திரையைச் சுட்டுவதும் சுடுவதும் பெண் எழுத்து" (பெண் எழுத்து – ப. 14 )

என்று சமூகத்தில் பெண் தாழ்ந்த நிலையில் நடத்தப்படுவதை விளக்குகிறார்.

சுயம் பேசும் கிளியில் பெண்

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகவே பெண்கள் தங்கள் இல்லச் சிறையிலே அடைக்கப்பட்டுள்ளனர். எந்தவிதமான தனிமுடிவும் எடுக்க முடியாத நிலையில் உள்ளனர். வள்ளுவரும் இல்லம் பெண்களுக்குச் சிறை என்பதைஇ

"சிறை காக்கும் காப்பு எவன் செய்யும் மகளிர்
நிறை காக்கும் காப்பே தலை" ( குறள் எண் - 57)

என்கிறார். பெண்களுக்கு இல்லக்காவல் என்பது தேவையில்லாத காவலே. சுயம் பேசும் கிளி எல்லா விதத் தடைகளையும் மீறி சுதந்திரம் பெற விரும்புவதாக உள்ளது. மேலும் சுயம்பேசும் கிளியில் குடும்ப வாழ்வில் பெண் பற்றிக் கூறும்போதுஇ கணவன் மனைவி உறவுநிலைஇ கற்புஇ தாய்மையின் சிறப்புஇ உறவுக்கு ஏங்கும் நிலைஇ பிறந்த வீட்டைப் பிரிந்த பெண்ணின் நிலைஇ காதல்இ காதல் - குடும்ப வாழ்வு வேறுபாடு வரதட்சணைக் கொடுமை பிரிவின் துயரம் பெண் கோபத்தை வெளிப்படுத்தும் விதம் எனப்பலவற்றைக் கூறுகிறது.குடும்ப வாழ்வில் கணவன் மனைவிக்கு இடையே பிரச்சனை ஏற்பட்டால் அவர்கள் நேருக்கு நேர் பார்ப்பதோ ஒருவரை ஒருவர் தீண்டுவதோ பேசுவதோ கிடையாது. குழந்தைகள் மூலமே நாட்களை நகர்த்துகின்றனர் என்பதைஇ

"நேருக்கு நேர் பார்வையில்லை சுண்டு விரல் கூடத் தீண்டவில்லை
குழந்தைகள் துணையில்
தாம்பத்யப் பயணம்" ( சு.பே.கி – ப. 25 )

என்று ‘மறுபடியும் மறுபடியும் மறுபடியும்’ என்ற கவிதையில் ஆண்டாள் பிரியதர்ஷனி கூறுகிறார்.

தாய்மையின் சிறப்பு

ஒரு பெண் தாயாகும் போதே வாழ்வில் முழுமையடைகிறாள். இதனால் பெண்கள் தாய்மைப் பண்பை பெரிதும் விரும்புகிள்றனர். தனது பசி மறந்து குழந்தைக்கு ஊட்டுவதுடன் தான் எங்கிருந்தாலும் எப்போதும் குழந்தைகளைப் பற்றியே சிந்திக்கிறாள். பத்து மாதம் சுமந்து பிள்ளைக்காகப் பார்த்துப் பார்த்து உண்டுஇ அசைய முடியாமல் பெண் அடையும் இன்னல்களைத் தவம் என்று ‘போதிமரமும் பாதிமரமும்’ கவிதை கூறுகிறது. இதைஇ

“பத்து மாச வயிற்றுச் சுமைக்காகப்
பிடித்ததை விட்டு பிடிக்காததை ஏற்று
நிற்க நிமிர குனிய அமர படுக்க நடக்க நரகம் அனுபவித்து
உயிரைப் பிளந்து உயிரைப் பிறப்பிக்கும்
தாய்மை வேதனை தவம் தானே? ” ( சு.பே.கி – ப.73 )

ஏன்ற வரிகள் மூலம் அறியலாம். தன் உயிரைக் கொடுத்து இன்னொரு உயிரைப் பிறப்பிக்கும் தாய்மை தவம் ஆகும்.

உறவுக்காக ஏங்கும் நிலை

பெண்கள் பெரும்பாலும் உறவுக்கு அடிமையாகக் கூடியவர்களாகவே உள்ளனர். பெண் ஆரம்பத்தில் பெற்றோரின் பாசத்திற்கும் பின் கணவனின் பாசத்திற்கும் பிற்காலத்தில் குழந்தைகளின் பாசத்திற்கும் அடிமையாக உள்ளாள். மணியார்டரில் வரும் கையெழுத்தை விட பிள்ளையை நேரில் பார்க்க வேண்டும். அவர்களோடு இருக்க வேண்டும் என்பதையே தாய் விரும்புகிறாள். அதுமட்டுமின்றி என் வயிற்றுப் பசியைப் பொறுத்து உணவு தந்தேன். இறுதியாக வாய்க்கரிசி போட வருவாயா? என மகனின் பாசத்திற்காக ஏங்கும் தாயின் நிலையைஇ

வெற்றுப் பானையின்
கடைசி அரிசியையும்
கண்ணீரில் வேக வைத்து ஊட்டினேன்
வாய்க்கரிசி போட வருவாயா ? ( சு.பே.கி – ப. 167 )

என்ற வரிகளின் மூலம் அறியலாம்.

பிறந்த வீட்டைப் பிரிந்த பெண்ணின் நிலை

திருமணம் என்பது ஒரு பெண்ணை முற்றிலுமாக மாற்றிவிடுகிறது. தம் புதிய உறவான கணவனின் உறவினையும் அவனைச் சார்ந்த உறவுகளையுமே தன்னுடைய உறவாக ஏற்று அவ்வாறு வாழ வேண்டிய நிர்பந்தத்திற்கு ஆளாகிறாள். கணவன் வீட்டிலுள்ளோர் கொடுமை செய்தாலும் தாய் வீட்டிற்குத் திரும்பி வர முடியாத நிலையில் உள்ளனர். பிறந்த வீட்டைப் பிரிந்த நிலையைப் பற்றிக் கூறும்போதுஇ சுயம் பேசும் கிளி பெண்கள் பிறந்த இடத்தைப் பிரிந்து வந்தாலும் பெண் தன் தன்மையிலிருந்து மாறுவதில்லை என்னும் கருத்தைஇ

“தன்னை மறப்பதும் தன்சுகம் துறப்பதும்
உயர்ந்த ஞானமாம் விடுதல் - ஞானமாகுமா?
வேர்களை விட்டு விட்டால் போதி மரம் கூடப்
பாதி மரமாகி விடும்” (சு.பே.கி. – ப.72)

என்று 'போதிமரமும் பாதிமரமும'; என்னும் கவிதையில் ஆண்டாள் பிரியதர்ஷனி கூறுகிறார்.

பெண்கள் வேலை செய்யும் விதம்

பெண்களின் வாழ்க்கை மிகவும் குறுகிய வட்டத்தினை உடையது. அவளது உலகமே அவளது குடும்பம் தான். குடும்பத்தில் முக்கியப் பொறுப்புகள் அனைத்தும் பெண்களுக்கே உள்ளன. பெண் என்பவள் காலையில் விழித்ததிலிருந்து இரவில் உறங்கச் செல்லும் வரை தம்முடைய பணிகளைச் செய்து கொண்டே இருக்கிறாள்.

"மறுபடி மறுபடிக் கழுவி மெழுகி
மறுபடி மறுபடிச் சமைத்துச் சமைத்து
மறுபடி மறுபடி படுத்துப் படுத்து
மறுபடி மறுபடி சுமந்து தளர்ந்து
மறுபடி ஓடி மறுபடி ஓய்ந்து
மகளே.. என் மகளே... இதுவா பெண் வாழ்க்கை?" (சு.பே.கி.- ப.34 )

என்று பெண்ணின் நிலையை சுயம் பேசும் கிளி கூறுகிறது.

பெண்ணின் காதல்

காதல் என்பது உள்ளத்தில் ஏற்படும் ஒருவித அன்பு ஆகும். ஒரு ஆண் பெண் மீது வைக்கும் அன்போ அல்லது பெண் ஆண் மீது வைக்கும் அன்போ சமுதாயத்தில் காதல் என்ற பெயரில் அழைக்கப்படுகிறது. எவ்வளவு காலமானாலும் காதல் என்பது மாறாது. உடம்பிற்கு வயதானாலும் மனதிற்கு வயதாகாது. காதல் வாழ்க்கையில் பகிர்ந்து கொண்ட பொருட்கள் பிற்காலத்தில் நினைத்துப் பார்க்கத் தூண்டும் என்பதனைஇ

"ஊடலைத் தணிக்கத் தந்த
கண்ணாடி வளையல் பொடிப் பொடியாய் உடைந்தது
இருபது பக்கத் தயக்கத்தில் கடைசி வரியில்
காதலைச் சொன்ன கடிதம் மங்கியிருந்தது" (சு.பே.கி. – ப.143 )

என்று நினைவுகள் பழமையானாலும் காதல் மாறாத நிலையை 'மனசுப்பரண்' கவிதை மூலம் கூறுகிறார்.

**முதிர்கன்னிகளின் நிலை**

ஒரு ஆண் திருமணமாகாமல் இருந்தால் 'பிரம்மச்சாரி' என சிறப்பிக்கப்படுகிறான். ஆனால் மிக மிக வயதாகியும் திருமணம் ஆகாமல் இருக்கும் பெண்களை 'முதிர்கன்னிகள்' என்று இந்தச் சமுதாயம் இழித்துரைக்கிறது. தலை முதல் பாதம் வரை பார்த்து மாடுகளை பல் பிடித்து பார்ப்பது போன்ற எண்ணத்தில் பெண்களைக் குறை கூறிக் கழிக்கின்றனர். இதை மாடுகளைக் கூறுவது போலவேஇ

"பல் பிடித்துப் பார்த்து வால் நீளம் அளந்து
உடம்பு முழுக்கத் தடவிப் பார்த்து கத்த வைத்து கதற வைத்து
ஒரு சுற்று ஓட வைத்தும் ஏலம் போகாது" (சு.பே.கி. – ப.58 )

என்று 'காமதேனு ஒரு கரம்' கவிதையில் பெண்ணின் திருமணத்திற்குக் காத்திருக்கும் நிலையைக் கவிஞர் கூறுகிறார்.

**வேலைக்குச் செல்வதால் ஏற்படும் பாதிப்புகள்**

பெண்கள் வேலைக்குச் செல்வதால் பலவிதமான பாதிப்புகளுக்கும் உள்ளாகின்றனர். இதனால் உடலளவிலும் மனதளவிலும் பெரிதும் வருந்துகின்றனர். ஏனெனில் வேலைக்குச் செல்வதால் வீட்டில் ஒருவரையும் கவனிக்க இயலாத நிலை ஏற்படுகிறது. இதை 'பார்வதி வேலைக்குப் போனாளா?' என்னும் கவிதையில்இ

"முதலாம் நாளே தாய்ப்பால் மறுத்தேன்
முப்பதாம் நாளே உன் அருகாமை தொலைத்தேன்
தட்டச்சு செய்தால் தான் வாழ்க்கை தட்டாது
தாய்ப்பாலுக்கு மாற்று உண்டு சம்பளத்துக்கு?" ( சு.பே.கி.- ப.19 )

என்று பொருளாதாரப் பின்னடைவைக் கூறி இதன் மூலம் தாய்மையின் பரிதாபமான நிலையை முன்னிலைப்படுத்துகிறார் ஆண்டாள் பிரியதர்ஷனி.

சுயம் நிறுவும் பெண்

பெண் என்பவள் இல்லம் என்னும் கூட்டுக்குள் அகப்பட்டுவிடாமல் அவள் சுதந்திரமாக அவள் நினைத்ததைச் செய்யும் உரிமை அவளுக்குக் கிடைக்க வேண்டும். பெண் தன்னுடைய சிறு சிறு ஆசைகளையெல்லாம் விட்டு விட்டு ஏங்கும் நிலை மாற வேண்டும். சுதந்திரம் என்பது கொடுப்பதில் அல்ல. பெண்களாக தான் விரும்பியதை தானே முயன்று அடைவதில் தான் இருக்கிறது என்பதைஇ

"ஆகாரம் வேண்டாம் அகரம் தான் வேண்டும்
சிறைகள் வேண்டாம் சிகரம் தான் வேண்டும்

என்றும்

ஊட்டும் கனியை விடக் கொத்தும் கனியின் காம்பில்
சுதந்திரம் தொங்குகிறது" (சு.பே.கி. ப.170 ) என்ற வரிகள் மூலம் கூறுகிறார் கவிஞர்.

**முடிவுரை**

ஆண்களாலும் சமூகத்தாலும் பெண்மை அடிமைப்படுத்தப்பட்டாலும் தன் மன உணர்வுகள் வெளிப்படாவண்ணம் பெண்மை அமுக்கப்பட்டாலும் தன் விடுதலையைத் தானே முயன்று பெறுவது தன் சுயத்தைத் தானே நிறுவுவது முதலானவை பெண்மைக்குச் சாத்தியமே என்று சுயம்பேசும் கிளி கூறுகிறது. தாய்மை உறவுக்காக ஏங்கும் பெண்ணின் நிலைஇ வேலைக்குச் செல்லும் பெண்கள் அனுபவிக்கும் இன்னல்கள் எனப் பல்வேறு தளங்களில் வெளிப்படும் பெண்மை குறித்த கருத்தாக்கங்களை எடுத்துக்கூறி பெண்மை வீரியமிக்கது என்பதை நிரூபிக்கிறது.

துணை நூற்பட்டியல்;

1.ஆண்டாள் பிரியதர்ஷனி - சுயம் பேசும் கிளி , ராகவேந்திரா வெளியீடு, அண்ணா நகர், சென்னை – 600040, முதற்பதிப்பு – பிப்ரவரி 2001

2.ஆண்டாள் பிரியதர்ஷனி - பெண் எழுத்து , ஏகம் பதிப்பகம சென்னை – 600040, முதற்பதிப்பு – பிப்ரவரி 2001

3. தமிழ் வேட்பன் - திருக்குறள், ஸ்ரீ செண்பகா பதிப்ப. தேனாம்பேட்டை, சென்னை – 600083, முதற்பதிப்பு – அக். 1995

4. முத்துச்சிதம்பரம்.ச - பெண்ணியம் தோற்றமும் வளர்ச்சியும் , தமிழ்ப் புத்தகாலயம், தி.நகர், சென்னை – 600017. முதற்பதிப்பு – 2007.